## லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை - 2022, 2023 மற்றும் 2024

---

லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியின் (“கம்பனி”) 2022 சனவரி 01 முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப் பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கை தொடர்பாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற கம்பனியின் செயற்பாட்டு நிலைமைகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.2 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் இதுவரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் 02 வருடங்களும் 04 மாதங்களும் தாமதமாகி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) கம்பனியின் இறுதித் தடவையாக கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட அதாவது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி கம்பனியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானங்கள் மற்றும் செலவின விடயங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சொத்துக்கள் | பெறுமதி ரூபா |
|---|---|
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 13,156,768 |
| இருப்புக்கள் | 60,317 |
| கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 19,124,332 |
| நிலையான வைப்புக்கள் | 52,967,856 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 12,533,700 |
| **மொத்த சொத்துக்கள்** | **97,842,973** |
| **உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | 70 |
| நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் | (32,275,027) |
| **பொறுப்புக்கள்** | |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 65,599,055 |
| நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் நடைமுறைக் கணக்கு | 64,501,732 |
| செலுத்த வேண்டிய வரி | 17,143 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | **97,842,973** |
| **வருமானம் மற்றும் செலவினம்** | |
| மொத்த வருமானம் | 30,299,619 |
| ஏனைய வருமானம் | 6,012,528 |
| மொத்த செலவினம் | 38,320,930 |
| வரிக்கு முன் இலாபம் | (2,008,783) |
| வரி செலுத்துதல் | - |
| வரிக்குப் பின் இலாபம் | (2,008,783) |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைவு நிதி கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய விருந்தினர் விடுதி வாடகை வருமான மீதி ரூபா 36.59 மில்லியன் ஆகும். | ஏற்றுக்கொள்கின்றோம். | விரைவாக உரிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 ஆம் பிரிவு | ஒவ்வொரு கலண்டர் வருடத்திற்கும் ஒரு தடவை சபையினால் வருடாந்த கூட்டம் கூட வேண்டியிருந்த போதிலும் கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியால் தாபன செயலாளரின் கடமை நடவடிக்கைகள் மாதாந்த கட்டணம் செலுத்தும் அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. வருட இறுதிக் கணக்குகள் தயாரித்தல் தாமதம் ஆகக் காணப்படுகின்றமையால் வருடாந்த பொதுக் | கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பொதுச் சபைக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூட்டத்தை நடாத்துவதற்கு பிரச்சனையான நிலைமை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக அந்த நிறுவனத்திற்கு அறிவித்து எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | கம்பனி தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்தப் பாதீட்டுடன் நிதி எதிர்வு கூறல்களை உள்ளடக்கி 05 வருட காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டி இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் நிதி சில மாதங்களுக்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு முதல் 2031 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் ஒன்று எதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிமுகப்படுத்தப் பட்ட நிறுவன நல்லாளுகை தொடர்பான செயற்பாட்டுக் கைநூல் 3.1 ஆம் பந்தி | கம்பனியின் பதவியணியினருக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறவேண்டி இருந்ததுடன் 3.2 (i) இன் பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்று தயாரித்து அதற்காகவும் உரிய அமைச்சினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் பெற வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினருக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைகளத்திற்கு 2025 யூன் 11 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரம் கிடைக்கும் வரை முகாமைத்துவ சேவைகள் சட்டத்திற்கு இணங்க சம்பளம் தயாரித்து பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அது அங்கீகரித்துக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெறுதல் வேண்டும். |
| | 6.1 (ii) ஆம் பந்தி | நிதி நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரம் கையளித்தல் நடைமுறை ஒன்று கம்பனியிடம் காணப்படவில்லை. | தற்போது கம்பனிக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற நிதி நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரம் கையளிக்கும் நடைமுறை தற்போது எங்களால் நாளது வரையாக்கி தயாரிக்கப்படுவதுடன் அது எதிர்காலத்தில் உரிய அங்கீகாரத்துடன் | நிதி நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம் கையளிக்கும் நடைமுறை ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் PED/01/2021(iii) என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனியின் நிதி நடவடிக்கைகள், நிர்வாகம் மற்றும் மனித வள நடவடிக்கைகள், செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பெறுகைகள் மற்றும் கேள்வி நடவடிக்கைகள் தொடர்பாக நிறுவன கட்டமைப்பு ஒன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்படாது இருந்ததுடன் கம்பனியினால் அந்தக் குறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் எந்த நிறுவன கட்டமைப்பு அல்லது கொள்கையின் பிரகாரம் என்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த நடவடிக்கைகளில் அநேகமானவை நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு துறைகள் தொடர்பாகவும் நிறுவன ரீதியான மற்றும் நிதிசார் கட்டமைப்பு தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |
| (உ) | அரசாங்க பெறுகைகள் கோவையின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (இ) | கம்பனியால் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2026 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு கூடிய விரைவில் சமர்ப்பிக்கப்படும். | முறையான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்து அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை கையாளல் வேண்டும். |

## 2.3 செயற்பாட்டு நடவடிக்கைகளின் மீளாய்வு மற்றும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விருந்தினர் விடுதி முகாமைத்துவத்திற்காக கம்பனி ஒன்று ஸ்தாபித்து சட்ட ரீதியான உரித்து தொடர்பான விசாரணையின் போது அதிகார சபை அதற்காக சட்ட ரீதியான உரித்து ஒன்று காணப்படாது இருந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கும் போது 2008 செப்தெம்பர் 29 ஆம் திகதி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் யூடீஏ ரெஸ்ட் ஹவுஸ் என்ற பெயரில் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 மார்ச் 11 ஆம் திகதிய சட்டமா அதிபரின் கடிதத்தின் பிரகாரம் ஸ்தாபிப்பதற்காக அதிகார சபைக்கு அதிகாரம் காணப்படாது இருந்ததாகவும் விருந்தினர் விடுதி நிர்வாகம் மாத்திரம் அந்த அதிகார சபையின் கீழ் மேற்கொள்ள | கம்பனி ஸ்தாபித்தலில் காணப்படுகின்ற சட்ட ரீதியான நிலைமை தொடர்பான கருத்து ஒன்று வெளியிட முடியாதுள்ளதுடன் எதிர்காலத்தில் எமது கம்பனியின் பணிப்பாளர் சபையுடன் இது தொடர்பாக கலந்துரையாடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சட்ட ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியுமாக இருந்தமையும் சட்டமாதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தது. 2010 நவம்பர் 15 ஆந் திகதி கம்பனியின் பெயர் லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் ஆக மாற்றப்பட்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் யூடீஏ ரெஸ்ட் ஹவுஸ் கம்பனிக்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று 2008 யூன் 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு கம்பனி உழைக்கின்ற வருமானத்தில் சகல செலவினங்களையும் செய்த பின்னர் எஞ்சுகின்ற தொகை முழுமையாக உரிய உள்ளூராட்சி நிறுவனத்திற்கு செலத்த வேண்டும் எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இலாபப் பங்காக (சதவீதம் குறிப்பிடப்பட வில்லை) தொகை ஒன்று செலுத்த வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமாகக் காணப்பட்ட விருந்தினர் விடுதிகள் யாவற்றினதும் முகாமைத்துவம், செயற்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் 2008 யூன் 27 ஆந் திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினால் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 விருந்தினர் விடுதிகளின் வழக்கு நடவடிக்கைகள் மற்றும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் காரணமாக செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் அவற்றை செயல்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக வாடகை அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2024 யூலை 09 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தின் போது ஒரு மாத காலத்திற்குள் தேவையான நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியின் தலைவருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப ட்டிருக்கவில்லை. | இந்த உடன்படிக்கை காணப்படாத விருந்தினர் விடுகள் தொடர்பான விரிவாக ஆய்வு ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் உடன் படிக்கை இன்றிய போதும் இந்த விருந்தினர் விடுதிகளில் அநேகமானவை செயற்பாட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையினால் அவற்றில் காணப்படுகின்ற நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் பணிப்பாளர் சபையின் எதிர்கால தீர்மானங்களின் பிரகாரம் அந்த விருந்தினர் விடுதிகளை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கோ அல்லது மீண்டும் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2024 யூலை 09 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளையை அமுல்படுத்துவதற்கும், கம்பனியின் நோக்கங்கள் மற்றும் தொலை நோக்கின் பிரகாரம் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நடவடிக்கை எடுப்பதற்கும் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | காணிகளின் உரித்து தற்போது வரையும் கம்பனிக்கு கையேற்கப்படாது உள்ள மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளுக்கு உரிய 28 விருந்தினர் விடுதிகளுக்காக கம்பனியால் விருந்தினர் விடுதி | உள்ளூராட்சி நிறுவனங்களில் 65 சதவீதத்திற்கு உரிய ஆரம்ப ஆவணங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதிலளிக்கப்படாது இருந்ததுடன் வருமானத்தில் | கொடுப்பனவுகளுக்கான அடிப்படையான மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் 65 சதவீத அளவு ஒன்று செலுத்தப்படுவதுடன் அந்த சதவீதத்தை தீர்மானித்தல் எந்த அடிப்படையாகக் கொண்டது என உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | 65 சதவீதத்தை அறவிடுவதற்கு உரிய ஆரம்ப ஆவணங்கள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களில் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தற்போது இந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனி மற்றும் உரிய விருந்தினர் விடுதிகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் முகாமைத்துவக் கட்டணம் செலுத்தாது இருக்குமாயின் அந்த விருந்தினர் விடுதிகளை மீண்டும் கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 36,596,690 ஆன 24 விருந்தினர் விடுதிகளில் 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் முகாமைத்துவ சேவைக் கட்டணம் செலுத்தாது இருக்கின்ற விருந்தினர் விடுதிகளை கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அநேகமான விருந்தினர் விடுதிகளினால் அந்த நிலுவைப் பணம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே மேலும் நிலுவைப் பணம் செலுத்தாத விருந்தினர் விடுதி தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 3.77 மில்லியன் இலாபம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2 மில்லியன் நட்டம் வரை வீழ்ச்சியடைந்து இருந்ததுடன் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இலாப நட்டங்களை இனங்காண்பதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நோயின் காரணமாக சகல விருந்தினர் விடுதிகளுக்காகவும் 50 சதவீதம் விடுவிப்பதற்கும் 14 மாதங்களுக்காக முழுமையாக விடுவிடுப்பதற்கும் ஒரு மாதம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக 2021 ஆம் குறைவடைந்து காணப்பட்டது. | குறித்துரைத்த பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சரியாக இலாபம் / நட்டத்தை இனங்காண்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடல் | i) உடன்படிக்கையில் கம்பனியின் பெயரை பிழையாகக் காண்பித்தமை.<br>ii) உடன்படிக்கைகளில் புதிய கம்பனி சட்டத்திற்குப் பதிலாக பழைய கம்பனி சட்டம் காண்பிக்கப்பட்டமை.<br>iii) மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்கள் தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப் படாமை. | பழைய உடன்படிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை தீர்த்து புதிய உடன்படிக்கையின் வரைவு ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் நாளது வரையாக்கப்பட்ட உடன்படிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |